செ.வெ.எண்: 247

நாள்: 20/3/2010

# பத்திரிகை செய்தி

சமூக நலத்துறை மற்றும் மாநில சட்டம் பணிகள் ஆணைக்குழுவும் இணைந்து 20/03/10 அன்று அண்ணா மேலாண்மை நிலையத்தில், தத்தெடுத்தல் மீதான சட்டங்கள் குறித்தான கருத்தரங்கு நடைப்பெற்றது.

இக்கருத்தரங்கில் அனைத்து மாவட்ட முதன்மை நீதிபதிகள், மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்ட அலுவலர்கள், சட்ட வல்வுனர்கள் சமூக நலத்துறை அலுவலர்கள், சமூக சேவகர்கள், தத்து திட்டத்தினை செயல்படுத்தி வரும் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள் கலந்துக் கொண்டர்.

இக்கருத்தரங்கில் கலந்துக் கொண்ட அனைவரையும் மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் செயலர் திரு.கோகுல்தாஸ் அவர்கள் வரவேற்று இக் கருத்தரங்கின் சிறப்பம்சம் குறித்து எடுத்துரைத்தார்.

உயர்நீதிமன்ற மாண்புமிகு முதன்மை நீதிபதி திரு. ஹேமந் லஷ்மண் கோகுலே அவர்கள் நிகழ்ச்சியினை துவக்கி வைத்து துவக்க உரை நிகழ்த்தினார். அவரது உரையில், குழந்தைகள் நாட்டின் சொத்து என்பதனையும், ஆதரவற்ற குழந்தைதளுக்கு தத்து திட்டம் சிறந்ததொரு புணர்வாழ்வு திட்டம் என்பதையும் வலியுறுத்தினார்.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர், திருமதி. பி. கீதா ஜீவன் அவர்கள், அவரது தலைமை உரையில், திருத்திய இளம் சீறார்களுக்கான நீதி சட்டம் 2006–ன் படி குழந்தைகள் காப்பகங்கள் அனைத்து வசதிகளுடனும் இயங்குகின்றனவா என்பதனை ஆய்வு

-2-

சோபலம்: 247



செய்யும் பொருட்டு சிறப்பு குழுக்கள் அமைத்துள்ளதாகவும், விதி முறைகள் மீறி செயல்படும் தகுதியற்ற நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்றும் ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும், சிறப்பு தத்தெடுப்பு நிறுவனம் ஒன்று நிறுவப்படும் எனவும், இந்நிறுவனம் மூலம் பெற்றோர் இல்லாத குழந்தைகள், தத்து திட்டத்தின் கீழ் புணர்வாழ்வு அளிக்க இயலும் எனவும் தெரிவித்தார். தலைமை செயலர் திரு. திி.கே.எஸ். ஸ்ரீபதி இ.ஆ.ப., அவர்கள் தமது சிறப்புரையில், தத்துக்காக வழங்கப்பட்ட குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் குழந்தைகளின் சிறப்பான முன்னேற்றமே இத்திட்டத்தின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தினார்.

திரு. பி. ராம மோகன ராவ் இ.ஆ.ப., முதன்மை செயலர் சமூக நலம் மற்றம் சத்துணவுத் திட்டத்துறை அவர்கள், தமது வாழ்த்துரையில் இத்துறையானது சட்டத்திற்கு புறம்பான தத்தெடுத்தலை தடுப்பதற்காக ஒருங்கிணைந்த பாதுகாப்பு திட்டத்தின் கீழ் SARA, SCPC, DCPU, போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட உள்ளதாகவும், அவற்றின் மூலம் இத்தத்து திட்டம் திறம்பட கண்காணிக்கப்படும் என்பதனையும் எடுத்துரைதார்.

சட்டபூர்வமான தத்தெடுத்தல் மட்டுமே குழந்தைக்கு ஒரு நிலையான ஊன்றுகோலாக அமையும் என்று மாண்புமிகு நீதிபதி திரு. இப்ராஹிம் கலிஃபுல்லா, மற்றும் மாண்புமிகு நீதிபதி திரு. எலிபிதர்மாராவ் அவர்கள் எடுத்துரைத்தனர்.

திருமதி. எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப., ஆணையர் சமூக நலத்துறை அவர்கள், தமது நன்றியுரையில், சமூக நலத்துறை மற்றும் மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவும் இணைத்து நடத்தும் இந்நிகழ்ச்சி, தத்தெடுத்தல் குறித்த சட்டத்தில் உள்ள ஐயங்களுக்கு விடைகாணும் வகையில் அமைந்ததோடு மட்டுமல்லாமல், இந்நிகழ்ச்சி சமூக நலத்துறை வரலாற்றில் பதிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சியாக அமைந்தது என கூறி கருத்தரங்கினை இனிதே முடித்து வைத்தார்.

வெளியீடு: இயக்குநர்,
செ.ம.தொ.துறை, சென்னை-9